**IN THE COURT OF IV ADDITIONAL CITY CIVIL COURT,**

**CHENNAI-600 104.**

**S.C.No. 86 of 2023**

**Deposition of witness for PW-3**

பெயர் : வெற்றிசெல்வம் தேதி: **07.08.2025**

தந்தை பெயர் : சரவணன்

வயது : 54

முகவரி : நெ.418, திரு.வி.கா.நகர் குடியிருப்பு, சென்னை –11

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 7th day of August 2025 .

---

**07.08.2025**

சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

1.ம் எதிரி சங்கர், 5 ம் எதிரி ஸ்ரீதர், 6 ம் எதிரி ராஜா ஆகியோர் இறந்து விட்டனர். 2 ம் எதிரி ஸ்ரீதர், 3 ம் எதிரி ஜெகன் ஆஜர், 4 ம் எதிரி கார்த்திக் மீதான வழக்க தனியாக (83/2023) பிரிக்கப்பட்டுள்ளது.

**PW3– முதல் விசாரணை**

நான் நெ.418, திரு.வி.கா.நகர் குடியிருப்பு, சென்னை –11 என்ற விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் ஏற்கனவே சிம்சன் கம்பெனியில் வேலை பார்த்து வந்தேன். 19.1.2010 மதியம் 1.15 மணியளவில் சாப்பிட்டுவிட்டு வேலைக்கு போகும் போது குடியிருப்பு பகுதியில் என் வீட்டில் இருந்து மூன்று வீடுகள் தள்ளி கொலை செய்து விட்டதாக போலீசார் அங்கு கூட்டமாக இருந்தார்கள். போலீசார் அந்த இடத்தை பார்வையிட்டதற்கு என்னை சாட்சியாக இருக்கும் படி கேட்டுக் கொண்டார்கள். மற்றொரு சாட்சியாக சரவணன் என்பவரும் கையெழுத்து செய்தார். பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி

கையொப்பம் என்னுடையது தான். அந்தப் பார்வை மகசர் அ.த.சா.ஆ.2 ஆகும். சம்பவ இடத்திலிருந்து போலீசார் ஏழு, எட்டு பொருள்களை என் முன்னிலையில் எடுத்தார்கள். அதற்கு என்னை சாட்சியாக இருக்கும் படி கேட்டுக் கொண்டார்கள். அந்தப் பார்வை மகசர் அ.த.சா.ஆ.2 ஆகும். சம்பவ இடத்திலிருந்து போலீசார் ஏழு எட்டு பொருள்களை என் முன்னிலையில் எடுத்தார்கள். அதற்கு என்னை சாட்சியாக இருக்கும் படி கேட்டுக் கொண்டார்கள். என்னுடன் சரவணன் என்பவரும் இருந்தார். அந்த இடத்தில் இருந்து தம்புல்ஸ்–1, கண்ணாடி துண்டுகள், மிளகாய் பொடி பாக்கெட் கவர், செருப்பு, தொப்பி ஆகியவற்றை போலிசார் எடுத்தார்கள். அதற்கு என்னை சாட்சியாக இருக்கும் படி கேட்டுக் கொண்டார்கள். கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.3 ஆகும். என்னிடம் காட்டப்படும் பொருள்களை தான் போலீசார் சம்பவ இடத்திலிருந்து எடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த து தம்புல்ஸ்–1, கண்ணாடி துண்டுகள், மிளகாய் பொடி பாக்கெட் கவர், செருப்பு, தொப்பி ஆகியவை சா.பொ.1 முதல் சா.பொ.5 ஆகும் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என்னை போலீசார் மோட்சம் தியேட்டர் அருகே வைத்து விசாரித்தார்கள். வெட்டுப்பட்ட அந்த பையனை ஆம்புலன்ஸில் ஏற்றிச்செல்லும் போதும் நான் அங்கு தான் இருந்தேன் என்றால் சரிதான். காயம் பட்ட நபரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் போது அங்கு நான் இரண்டு மணி நேரம் இருந்தேன். ஏனென்றால் என்னுடைய வீடு பக்கத்தில் இருக்கிறது. நான் சிம்சன் கம்பெனியில் வேலை செய்தேன் என்ற விவரத்தை போலீசாரிடம் சொல்லி இருக்கிறேன். என்னுடைய கம்பெனியில் நான் என்னவாக வேலை செய்கிறேன் என்ற விவரத்தையும், என்னுடைய பணி நேரம், ஷிப்ட் ஆகியவை

குறித்து நான் போலீசாரிடம் சொன்னேனா என்றால் ஞாபகம் இல்லை. அந்த பையனை ஆம்புலன்ஸில் ஏற்றிச்செல்லும் போதும் நான் அங்கு தான் இருந்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்றைய தினம் நான் காலை ஷிப்ட் வேலையை முடித்துவிட்டு மதியம் வீட்டிற்கு சாப்பிடுவதற்காக வந்தேன் என்ற விவரத்தினை போலீசார் விசாரணையில் சொல்லி இருக்கிறேனா என்றால் சொல்லி இருக்கிறேன். ஜெனரல் ஷிப்ட் என்பது காலை 7 லிருந்து மாலை 5 மணி வரை. என்னுடன் பார்வை மகசரில் சாட்சி கையெழுத்து செய்த சரவணன் யார், அவர் எங்கு இருக்கிறார் என்ற விவரங்கள் எனக்கு தெரியாது. போலீசார் சம்பவ இடத்தில் சுமார் அரை மணி நேரம் முதல் ஒரு மணி நேரம் இருந்திருப்பார்கள். நான் அதற்குப் பிறகு வீட்டிற்கு சென்று விட்டேன். சுமார் ஒன்றரை மணி நேரம் கழித்து என்னை போலீசார் மீண்டும் கூப்பிட்டார்கள். சான்று பொருள்களை போலீசார் குறிப்பிட்டு எங்கிருந்து யாரிடமிருந்து எடுத்தார்கள் என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் முடியாது. அந்த இரண்டு கையெழுத்துகளையும் நான் ஒரே நேரத்தில் தான் போட்டேன் என்றால் சரியல்ல. முதல் பார்வை மகசரில் உள்ள கையெழுத்தை மதியம் 1.30 மணி அளவில் போட்டேன் அதற்குப் பிறகு மாலை 4.30 மணி அளவில் கைப்பற்றுதல் மகசர் உள்ள கையெழுத்தை போட்டேன். முதல் சாட்சி கையெழுத்து போட்ட போது போலீசார் என்னை விசாரிக்கவில்லை. இரண்டாவது சாட்சி கையெழுத்து போட்ட பிறகும் போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. சாட்சி வசந்தா, சாட்சி தேவி, சாட்சி குமார் ஆகியோர்களை எனக்கு நன்றாகத் தெரியும் என்றால் சரிதான். நான் அன்றைய தேதியில் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், என் முன்னிலையில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள் என்பதும் என் முன்னிலையில் போலீசார் வழக்கு சொத்துக்களை கைப்பற்றினார்கள் என்பதும்

பொய்யானது என்றால் சரியல்ல. நான் அந்த ஊரில் பெரிய மனிதர் என்றால் சரிதான். ஊரில் நான் தெரிந்த நபர் என்பதாலும், மேற்படி இரண்டு கையெழுத்துகளையும் நான் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

R K P TAMILARASI

Digitally signed by R K P TAMILARASI

07.08.2025

IV Addl. Sessions Judge.
IV Additional Court.